Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# இலங்கை, இந்தியா உள்ளிட்ட தென்னாசிய இந்து ஆலய சிற்பங்களும் இசைச்சான்றுகளும்

55

**தமிழினி மயூரன்**

**விரிவுரையாளர்,இசைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

mthamilini10@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

பொதுவாக இந்து ஆலயங்களில் சிற்பங்களும், இசைச்சான்று-களும் சிறப்பானவை. பதினான்காம் நூற்றாண்டு முதலாக இலங்கையிலே கட்டப்பெற்ற கோயில்கள் விஜயநகர கலைப்பாணியில் அமைந்தனவாகும். போர்ததுக்கேயரின் ஆட்சிக்காலத்திற் கரையோரப் பகுதியிலுள்ள சைவ ஆலயங்கள் எல்லாம் இடிபாடாகிவிட்டமையாற் தமிழர் செறிந்து வாழும் பகுதிகளிலுள்ள கோயில்களின் கட்டக்கலை அம்சங்களைப் பற்றித் தெளிவாக எதனையுங் கூறமுடியாது. இக்காலப்பகுதியிலே உருவாக்கப்பட்ட கோயில்களில் முன்னேஸ்வரம், தம்பலகாமம், கோணைநாயகர் கோயில், சீதவாக்கை பரமேஸ்வரர் கோயில் ஆகியன மிக விசாலமான கற்றளிகளாகும். முன்னேஸ்வரம் கோயில் ஒரு பெருங்கோயிலாக ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் அமைந்திருந்தது எனபது அவனுடைய 38ஆவது ஆண்டுச் சாசனத்தின் ஊடாக அறியப்படும். அது மூலஸ்தானத்தின் அதிஷ்டானப் பகுதியிலே எழுதப்பட்டுள்ளது.

இலங்கை, இந்தியா உள்ளிட்ட தென்னாசிய இந்து ஆலய சிற்பங்களில், விஜயநகரக் கலைப்பாணியும், இசைச்சான்றும் இவ் ஆய்வில் நோக்கப்படுகிறது. இவ் ஆய்வுக்கு விஜயநகரக் கலைப்பாணிக்குரித்தான ஆலய சிற்பங்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.

ஆய்வு திறவுச் சொற்கள் : சிற்பங்கள், கோயில், கற்றளி, சாசனம்.

**இலங்கை, இந்தியா உள்ளிட்ட தென்னாசிய**

**இந்து ஆலய சிற்பங்களும் இசைச்சான்றுகளும்**

சைவ ஆலயங்கள் எல்லாம் இடிபாடாகிவிட்டமையால் தமிழர் செறிந்து வாழும் பகுதிகளில் உள்ள கோயில்களின் கட்டடக்கலை அம்சங்களைப் பற்றித் தெளிவாக எதனையும் கூறமுடியாது. இக்காலப் பகுதியில் உருவாக்கப்பட்ட கோயில்களில் முன்னேஸ்வரம், தம்பலகாமம், கோணைநாயகர் கோயில், சீதவாக்கை பரமேஸ்வரர் கோயில் ஆகியன மிக விசாலமான கற்றளிகளாகும். அம் மூன்று கோயில்களிலும் ஆதியான கட்டடங்களிற் சில பகுதிகள் மட்டுமே எஞ்சியுள்ளன. சீதாவாக்கையிலுள்ள கோயிலின் அதிஷ்டானப் பகுதி மட்டுமே எஞ்சியுள்ளது. ஏனைய இரண்டு கோயில்களும் காலாகாலம் புனரமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் பல பகுதிகள் நவீன காலத் திருப்பணிகளாகும். வெருகல் சித்திர வேலாயுத சுவாமி கோயில், திருக்கோயில் சித்திர வேலாயுதசுவாமி கோவில், பழுகாமம் திரௌபதியம்மன் கோயில் ஆகியவற்றிலே மிகப்பெரிய கோபுரங்களும் சுற்றுப்பிரகாரங்களும் செங்கல்லினால் அமைக்கப்பட்டிருந்தன. ஆயினும்

புராதனமான கட்டடங்கள் காலப்போக்கில் அழிந்துவிட்டன.

முன்னேஸ்வரம் கோயில் இலங்கையில் உள்ள புராதனமான ஈஸ்வரங்களில் ஒன்றாகும். பல தனிச் சிறப்புக்களைக் கொண்ட முன்னேஸ்வரம் கோட்டை மன்னார்களின் காலத்தில் மிகுந்த சிறப்பினைப் பெற்றிருந்தது. ஐயவர்த்தனபுரக்கோட்டையில் அரசுபுரிந்த மன்னர்களதும் முன்னேஸ்வரம் பகுதியில் ஆதிக்கம் செலுத்திய குறுநில மன்னர்களதும், அங்குள்ள குடிமக்களதும் ஆதரவை அது பெற்றிருந்தது. கோயில் வளாகம் 120 அடி நீளமும் 110 அடி அகலமும் கொண்ட சுற்றுப் பிரகாரத்தில் அமைந்திருக்கின்றது. அதன் மூலஸ்தானமாகிய கருப்பகிருகமும் அந்தராளமும் அர்த்தமண்டபமும் முற்றிலும் கல்லினால் அமைக்கப் பட்டுள்ளன. மகா மண்டபமும் அத்தகையதாகும். அதுவும் மூலஸ்தானப் பகுதிகளைப்போன்று புராதனமான அமைப்பாகலாம். அதன் விதானத்திலே ஒரு வட்டத்தினுள்ளும் அதன் வெளியிலும் மீன் உருவங்களும் இணைக்கயல்களின் வடிவங்களும் அமைந்திருக்கின்றமை ஒரு சிறப்பம்சமாகும். கி. பி.1578 ஆம் ஆண்டிலே பேர்த்துக்கேயப் படைகளினால் முன்னேஸ்வரம் கோயில் சூறையாடப்பட்டு இடித்தழிக்கப்பட்டது.

அதன் பின்பு கோயிலின் எஞ்சியுள்ள பாகங்கள் கிறிஸ்தவ தேவாலயமாகப் போர்த்துக்கேயராற் பயன்படுத்தப்பட்டன. விமான சிகரத்தையும் மூலஸ்தானத்தையும் தவிர்ந்த கோயிலின் ஏனைய பகுதிகளையும் போர்த்துக்கேயர் தகர்த்து விட்டனர். அவர்களின் ஆட்சி ஒடுங்கியபொழுது நாயக்கர் காலத்தில், ஆலயம் மீண்டும் புனருத்தாரணமாகியது. விமான சிகரம் செங்கற் திருப்பணியாக 18ஆம் நூற்றாண்டிலே கீர்த்தி ரீ ராஜசிங்கன் காலத்திற் கட்டப்பட்டது. மூலஸ்தானம் தவிர்ந்த ஏனைய பகுதிகள் எல்லாம் அதற்குப் பின்பு உருவாக்கப்பட்டவை.

முன்னேஸ்வரத்திற் கற்றளியாக அமைந்த மூலஸ்தானம் 33 அடி நீளமும் 16 அடி அகலமும் கொண்டுள்ளது. மூலஸ்தானத்தில் இலிங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அதன் அருகிலே வடிவாம்பிகை என்று சொல்லப்படும் அம்மனின் விக்கிரகம் தாபனமாகியுள்ளது. இலிங்கத்தை மூலவராகக் கொண்டுள்ள கருவறையின் வலப்பக்கத்தில் விநாயகர் கோட்டமும் இடப்பக்கத்திற் சுப்பிரமணியர் கோட்டமும் காணப்படுகின்றன. கற்றளியான கோயிற்பகுதியின் கூரை முழுவதும் செவ்வகமான கற்பாளங்களினால் மூடப்பட்டுள்ளது. மகா மண்டபத்தில் நான்கு வரிசைகளாகவுள்ள கனதியும் உயரமும் கொண்ட தூண்கள் கூரையைத் தாங்கி நிற்கின்றன. தெற்கிலும் வடக்கிலும் உள்ள முனைகளிலே தூண்கள் சுவரையொட்டி அமைந்துள்ளன. தோற்றத்திலும் வடிவ அமைப்பிலும் தூண்கள் வெவ்வேறு விதமானவை. நடுவிலுள்ள இரண்டு வரிசைகளிலும் அமைந்துள்ள தூண்களின் அடிப்பாகமும் மேற்பாகமும் சதுரமாகவும் நடுப்பாகம் எண்கோணமாகவும் அமைந்துள்ளன. ஏனைய வரிசைகளில் உள்ள தூண்கள் எல்லாம நான்முகத் தூண்களாகும். தூண்களின் மேற்பாகத்தில் எதுவிதமான அலங்கார வேலைப்பாடும் காணப்படவில்லை.

முன்னேஸ்வரம் கோயிலின் ஆதியான கட்டுமாணங்களில் 16ஆம் நூற்றாண்டில் அழிவுறாது எஞ்சியிருக்கும் பகுதிகள் எளிமையுடனும், அலங்கார சிற்ப வேலைப்பாடுகளுடனும் காணப்படுகின்றது. ஆலயத்தைச் சுற்றியுள்ள பிரதக்ஷிண பாதையும், மண்டபங்களும், கோபுரமும்

அண்மைக்காலங்களில் உருவாக்கப்பட்டவை. மூலஸ்தானமும் அர்த்த மண்டபமும் ஆதியான கட்டடப்பகுதிகள் என்பது கர்ப்பகிருகத்துச் சுவர்களிலுள்ள தேவகோட்டங்களின் வேலைப்பாடு-களினாலும் அதிஷ்டானப் படைகளின் அமைப்பினாலும் தெளிவாகத் தெரிகின்றது. விஜயநகர கலைப்பாணிக்குரிய சிறப்பம்சங்களில் ஒன்றான

மாலைத்தொக்கல் புறச்சுவரில் அமைந்துள்ளமை கவனித்தற்குரிபதாகும். முன்னேஸ்வரம் கோயிலின் மூலஸ்தானம் ஆதியான கோயிலின் பகுதி என்பதால் அது பாதுகாக்கப்பட வேண்டிய தொல்பொருட் சின்னம் என்பது குறிப்பிடற்குரியதாகும். இலங்கையிலுள்ள திராவிடமான கற்றளிகளில் அதுவும் ஒன்றென்பதாலும் இலங்கையில் ஏற்பட்ட விஜயநகர கலைப்பாணியின் செல்வாக்கினைப் பிரதிபலிக்கும் விமானம் என்பதாலும் இலங்கையின் மத்தியகாலக் கட்டடக்கலை வரலாற்றில் அதற்கொரு சிறப்பிடம் உண்டு.

பதினெட்டாம் நூற்றாண்டில் மீண்டும் உருவாக்கப்பட்டுள்ள விமானம் 46 அடி உயரமானது. கண்டி இராச்சியத்தில் நாயக்க மன்னர் ஆட்சிபுரிந்த காலத்திலே செங்கல்லினால் உருவாக்கப்பட்ட முத்தள விமானம் காலப்போக்கிலே பலமுறை திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அரமியத்தின் மூன்று பக்கங்களிலே தேவகோஷ்டங்கள் அமைந்துள்ளன. தெற்கிலே தக்ஷிணாமூர்த்தியின் உருவமும் மேற்கிலே திருமாலின் வடிவமும் வடக்கிலே பிரமனின் படிமமும் அமைக்கப்பட்டுள்ளன.

சீதவாக்கைச் சிவன் கோயில், வெரெண்டி கோயில் என்று சொல்லப்படும் சிவன் கோயில் சீதாவாக்கையில் மாயதுன்னே என்னும் அரசனாற் பதினாறாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது. அது அளவிற் பிரமாண்டமானது; அதன் கட்டடங்கள் மிகவும் விசாலமானவை. போர்த்துக்கேய வரலாற்று ஆசிரியரான தே கூற்றோ அதனை மேல்வருமாறு வர்ணிக்கின்றார்.

இலங்கையில் உள்ளவற்றுள் மிகச் சிறந்ததும் பெரியதுமாகிய கோயில் இப்பகுதியில் உள்ளது. அங்கு படிமக்கோலமாகியுள்ள பரமேஸ்வரன் என்னும் கடவுளின் பெயரால் அது விளங்குகின்றது. இந்தக் கோயிலின் கட்டட அமைப்பு நூதனமானது. அதனைக் கட்டி முடிப்பதற்கு இருபது வருடங்கள் சென்றன என்றும் 2,000 தொழிலாளர் அதிலே தொடர்ச்சியாகப் பணிபுரிந்தனர் என்றுஞ் சொல்லப்படுகின்றது.

இரண்டாம் இராஜசிங்கனின் ஆட்சிக்காலத்திலும் (1581 - 92) சீதவாக்கைச் சிவன் கோவிலிற் கட்டடத் திருப்பணிகள் நடைபெற்றன. அவனுடைய காலத்திலே எழுதப்பெற்ற சவுல்சத்தேஸய என்னும் நூலிற் கோயிலைப் பற்றிய சில விவரங்கள் சொல்லப்படுகின்றன. மண்டபச் சுவர்களில் இராமாயணம், மகாபாரதம், புராணங்கள் என்பவற்றிலுள்ள சில அம்சங்கள் ஓவியங்களாக வரையப்பட்டிருந்தன. வெளிப் பிரகாரத்திலே தமிழிசைப் பாடல்கள் ஒலித்தன, பாடலுக்கு ஒத்திசைவாக நாட்டிய பெண்கள் ஆடல் புரிந்தனர்."

வெரெண்டி கோவிலைப் போர்த்துக்கேயர் முற்றாக அழித்துவிட்டனர். அதன் அதிஷ்டானப் பகுதி மட்டுமே எஞ்சியுள்ளது. அது கட்டுமானத்திலே திராவிடமானது என்பதை ஆலய

வரலாறும் அதன் வடிவமைப்பும் உணர்த்துகின்றன. அதன் அழிபாடுகள் 19ஆம் நூற்றாண்டில் எவ்வாறிருந்தன என்பதை அதனைக். கண்ட ஐரோப்பியர் சிலரின் குறிப்புக்களிலிருந்து அறியமுடிகின்றது. 1800ஆம் ஆண்டில் அதனைப் பார்த்த பேர்சிவல் மேல்வருமாறு எழுதுகின்றார்.

"பங்குனி 20 அன்றைய தினம் எங்கள் படைமுகாமிற்கு மிக அண்மையிலுள்ள ஆலயத்தின் வழிபாடுகளைப் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. இலங்கையில் நான் முதலாவதாகக் கண்ட கற்றளி அதுவேயாகும். நான்கு அல்லது ஐந்து அடி உயரம் வரையான சுவர்ப்பகுதிகள் எஞ்சியிருப்பதைக் காணமுடிந்தது. அவற்றைச் சுற்றி எல்லாப் பக்கங்களிலும் படிக்கட்டுகள் காணப்படுகின்றன. அதன் கட்டுமானம் மிகவுஞ் சிரமத்துடன் அமைக்கப்பட்டதாகும். அடித்தளத்திலும் எஞ்சியுள்ள தூண்களிலும் பல சாசனங்கள் இப்பொழுதுங் காணப்படுகின்றன.

**காரைக்காலம்மையாரின் சிற்பங்கள்**

காரைக்கால்அம்மையார் தொகையடியார்களில் ஒருவர். தேவாரம் பாடிய மூவருக்கும் முன்னவர். முதன். முதலாகத் திருவந்தாதி, இரட்டைமணிமாலை, பதிகம் எனப் பல சிற்றிலக்கிய வகை நூல்களைப்படைத்த பெருமைக்குரியவர். சமயத்தோடு இசை வளர்த்த சிறப்புக்குரியவர். சிவபெருமானால் அம்மையே என்று அழைக்கப்பெற்ற பெருமைக்குரியவர். கி. பி. 4(அ) 5 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராக எண்ணப்படுபவர்.

தமிழகத்திலும் இலங்கையிலும். கண்ணகி வழிபாடு காலூன்றியது. ஆனால் காரைக்காலம்மையாரின் வழிபாடு வேர் ஊன்றவில்லை. மாறாகத் தென்கிழக்கு ஆசியப் பகுதிகளில் காரைக்காலம்மையார் போற்றப்பட்டார். இது விந்தையான. உண்மை.

கம்போடியாவில் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த மகேந்திரன். அங்கே கோயில்களில் காரைக்காலம்மையாரின் பாடல்களைப் பாடுவதற்கு அறக்கட்டளை அமைத்தான். கம்பேடியா, தாய்லாந்து, இந்தோனோஷியா ஆகிய நாடுகளில். சிவபெருமானின் ஊழிக்கூத்துச் சிற்பங்களும் அவற்றுக்கு எதிரில் பேய் வடிவிலான காரைக்கால் அம்மையாரின் சிற்பங்களும் சிலைகளும் இருந்தன. அவை வழிபடப்பட்டன. வியட்நாமில் போங்குலே என்ற கோயிலில் ஊழிக் கூத்தன் சிலை முன்பு அம்மையாரின் சிலை செதுக்கப்பட்டுள்ளது. பண்டேய்ஸ்ரீ எனும் கோயிலில் (11ஆம் நூற்றாண்டு) நடராசனின் சிலையும் காரைக்காலம்மையாரின் சிலையும் காணப்படுகின்றன.

தாய்லாந்தில் காரைக்காலம்மையார் தாளக் கருவியுடன் இருக்கும் நிலையில் அழகான செப்புச் சிலை ஒன்று கிடைத்துள்ளது. இது 8ஆம் நூற்றாண்டுக்கு உரியது. சுமத்திராவிலுள்ள ஸ்ரீ விஜயநகரில் பேய் வடிவம் கொண்ட காரைக்காலம்மையாரின் சிற்பம் உள்ளது.

கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு முதல் தமிழ்நாட்டின். கடல் வணிகர்கள் காரைக்காலம்மையாரைத் தங்கள் குலதெய்வமாகக் கொண்டு வழிபட்டார்கள். கடல்கடந்து பிறநாடுகளோடு வணிகம்செய்வதற்குச் சென்றபோது தங்கள் குலதெய்வமாகிய. காரைக்கால் அம்மையாரின் சிலையையும் தங்களுடன் எடுத்துச் சென்றார்கள் என்று க. த. திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார். (தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு)

**தென்னாட்டுக் கோயில் கட்டட அமைப்பு முறை கொண்டவை.**

தென்கிழக்காசிய நாடுகளில் முற்காலத்தில் பல சிவன் கோயில்கள் கட்டப்பட்டன. மலேசியாவில் கெடா பகுதியில் சிவன் கோயில் ஒன்று அகழ்ந்தெடுக்கப்பட்டது. இது கி.பி. ஆறு அல்லது ஏழாம்நூற்றாண்டுக்கு உரியது. இது மாமல்லபுரத்து ஒற்றைக் கல்கோபுரம் போன்ற அமைப்பு கொண்டது. இதனுள் மாபெரும் சிவலிங்கம் ஒன்றுள்ளது. துர்க்கை, மகிஷாசுரமர்த்தினி ஆகிய சிலைகளும் உள்ளன. சிறிய விநாயகர் சிலையும் கிடைத்துள்ளது. ஜாவாவில் லோரா ஜோங்குராங் என்ற பகுதியில் எட்டுக் கோயில்கள் உள்ளன. இவை குன்றின் மேலுள்ளன. இவற்றில் நடுநாயகமாகச் சிவன் கோயில் விளங்குகிறது. அதன் இரண்டு பக்கங்களிலும் பிரமனுக்கும் திருமாலுக்கும் கோயில்கள் உள்ளன.

பாலித் தீவிலும் தமிழ்நாட்டுப் பாணியில் கோயில்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை குன்றுகளில் கட்டப்பட்டுள்ளன. இவை, சிவபெருமானுடைய கோயில்களாகும். இந்தச் சிவன் கோயில்களில் பதினொரு மாடங்களைக்கொண்ட விமானம், கலசம் ஆகியவை அமைந்துள்ளன. கருவறையின் வாயிலில் துவாரபாலகர் உள்ளனர். இங்கு மும்மூர்த்தி வழிபாட்டிற்கும் கோயில்கள் இருக்கின்றன. இதில் சிவபெருமான் நடுவில் இருக்கிறார். திருமால் இடப்புறமும், பிரமன் வலப்புறமும் இருக்கிறார்கள். ஜாவாவில் பனாதரன் எனுமிடத்தில் பல சிவன் கோயில்கள் உள்ளன. இங்குள்ள சிற்பங்கள் இயற்கைத் திறனுடையதாக அமைந்துள்ளன. பர்மாவில் பாகானில் அலவங்கு, கயவுக்கு எனும் பெயர்களில் கோயில்கள் உள்ளன. இவை திருமாலின் கோயில்கள் ஆகும்.

**இசைத்தூண்கள் :**

தட்டினால் இசை ஒலி எழுப்பும் இசைத் தூண்கள் தமிழ்நாட்டில் பல்வேறு ஆலயங்களிலும் அமைந்துள்ளன. இசைத்தூண் என்பது ஒரே கல்லினால் அமைந்தது. ஆணால் ஒரே கல்லில் பல தண்டுகள் அல்லது தூண்கள் வடிக்கப்பெற்றுள்ளன. கல்லும் கவியாடும் என்ற மொழிக்கேற்ப இத்தண்டுகளை மெதுவாகத் தட்டும் பொழுது ஒவ்வொரு தண்டும் ஓர் இனிய ஒலியை எழுப்புகின்றது. கல்தூண் தட்டும் பொழுது இசையை எழுப்புவதால் இசைத்தாண் என்று அழைக்கப்பாடுகின்றது. இத்தகைய இசைத்தாண்கன் மதுரை, திருநெல்வேலி, ஆழ்வார் திருநகரி, கிருஷ்ணாபுரம், செண்பகராமநல்லூர், தென்காசி, சுசீந்திரம் முதலான பல்வேற ஆலயங்களில் காணப்படுகின்றன.

ஏழிசையாய், இசைப்பயனாய்
இன்னமுதாய், என்னுடைய
தோழனுமாய் யான் செய்யும்
துரிசுகளுக்கு உடனாகி

என்ற தேவார வரிகள் இறைவன் இசைவடிவானவன் என்று உணர்த்துகின்றன. எனவே இறைவன் எழுந்தருளியுள்ள ஆலயங்களில் பாட்டகத்து இசையாக நின்றானை குறிக்கும் வகையில் இசைத்தூண்களைத் தட்டினால் இனிய இசையும், ஒலி ஜாலங்களும் தோன்றுவதில் எந்தவித ஆச்சரியமும் இல்லை.

மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் 7 இசைத் தூண்கள் உள்ளன. ஆயிரங்கால் மண்டபத்தில் 2 இசைத்தூண்கள் அமைந்துள்ளன. வடக்கு கோபுர வாயிலருகே பிற இசைத் தூண்கள்

வேலியிடப்பட்டு தக்கபடி பாதுகாக்கப்படுகின்றன.

ஆயிரங்கால் மண்டபத்தில் உள்ள ஓர் இசைத்தூண் அனைவரும் தட்டி இனிய ஒலி கேட்டு மகிழும் வகையில் வசதியாக அமைந்துள்ளது. இதில் 22 தண்டுகள் உள்ளன. கீழ்க்கோடியில் உள்ள இசைத்தூணின் ஒரு தண்டு கழலும்பாடியாக அமைந்துள்ளது. இவ்வாறு அமைத்த சிற்பியின் செயல்திறனை என்னென்று புகழ்வது?

மாநகர் மதுரையில் மீனாட்சி அம்மன் ஆலயத்தில் மட்டுமன்றி 108 வைணவத் திருத்தலங்களில் ஒன்றான கூடலழகர் பெருமாள் கோவிலிலும், திருவாசகம் அருளிச் செய்த மாணிக்கவாசகப் பெருமான் அவதரித்த திருவாதவூரில் அமைந்துள்ள பாண்டியர் காலத்தில் நிர்மாணிக்கப்பாட்ட ஈச்வரன் ஆலயத்திலும் அநேக இசைத்தூண்கள் காணப்படுகின்றன.

இவ்வாறாக இலங்கை, இந்தியா உள்ளிட்ட தென்னாசிய நாடுகளிலுள்ள கட்டட, சிற்ப அமைப்புக்களை நாம் சிறப்பாக பார்த்தோம்.

உசாத்துணை நூல்கள்

1. **Ananda K. Coomarasamy. History of Indian and Indonesian Art.**
2. **K. Zimmer The Art of Indian Asia.**
3. **தென்கிழக்காசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு இந்திய இசைக்ீ கருவூலம் – பக்கிரிசாமி பாரதி.**